அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 19 /2017
தேதி: 11.2.2017

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை**

புரட்சி தலைவரால் தொடங்கப்பட்டு புரட்சித்தலைவியின் வழிகாட்டுதலில் அஇஅதிமுக என்ற பேரியக்கம், தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு பல்வேறு வழிகளில் உழைத்த இயக்கம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த இயக்கத்தின் தற்போதைய நிலையை குறித்த எனது வருத்தத்தை முன்னர் பதிவிட்டு இருந்தேன்.

புரட்சி தலைவியின் மறைவிற்கு பின்னர், பொறுப்பேற்ற முதல்நாள் முதல் உண்மையாக தமிழரின் நலனுக்காக உழைத்த திரு ஓ பன்னீர்செல்வம் அவர்கள் ராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார் என்றறிந்து வேதனைக்குள்ளானேன் என்றும் குறிப்பிட்டு இருந்தேன்.

திரு ஓ பன்னீர்செல்வம் அவர்களின் விசுவாசத்தையும் உழைப்பையும் நேரில் பார்த்த அனுபவத்தினாலும், அவர் திறமையில் உள்ள நம்பிக்கையினாலும், எங்கள் இயக்க சகோதரர்களின் விருப்பத்திற்கும் வேண்டுகோளிற்கும் மதிப்பளித்து சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் எனது சார்பிலும் முதலமைச்சர் திரு .ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் முயற்சி அனைத்தும் வெற்றிபெற வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்